ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2208/1 - 2020 දෙසැම්බර් මස 28 වැනි සඳුදා - 2020.12.28

*2208/1 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978* (XV) *(அ)*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும்,* PV *17745 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 6 ஆந் திகதிய 2157/ 3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான* II *ஆம் அட்டவணையை, அதற்கான நிரல்* I *இலும் மற்றும் நிரல்* II *இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படும் "வங்கித் தொழில் மற்றும் நிதியியலில் சிறப்பு வணிக முகாமைத்துவ இளமாணி" என்னும் பதிவினை உடனடுத்து, இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை* II *இல் முறையே நிரல்* I *இன் கீழும் மற்றும் நிரல்* II *இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

***அட்டவணை*** I

*நிபந்தனைகள்*

*1. சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், ஆனது கற்கைநெறி மூலம் வியாபார நிருவாக முதுமாணி (*SLQF *மட்டம் 9) தொடர்பில் இதற்கான அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு மாணவர்களைச்*

சேர்த்துக்கொள்ளும் போது, இலங்கைத் தகைமைச் சட்டத்தில் (SLQF) விதித்துரைக்கப்பட்டவாறான பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் :

(அ) (i) முகாமைத்துவம் அல்லது வியாபாரம் மற்றைும் பொருளியலின் இயைபான விடயத்துறைகளில் 30 திறமைச் சித்திகள் உட்பட ; அல்லது

(ii) முகாமைத்துவம் அல்லது வியாபாரம் என்ற விடயத்துறைகளில் முன்கற்றலுடன் அல்லது வேலை அனுபவத்துடன் ஓர் இளமாணிப் பட்டம் ;

(ஆ) முகாமைத்துவம் அல்லது வியாபாரம் மற்றும் பொருளியலின் இயைபான விடயத்துறைகளிலான அல்லது மேலே (அ)(i) அல்லது அ(ii) என்பதற்குச் சமமான தகைமையொன்று ; அல்லது

(இ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டவாறாக NVQ மட்டம் 7 ஐ வெற்றிரகமாகப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

2. சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்ட மீள் பரிசீலனைக்கு அமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| கற்கைநெறி மூலம் வியாபார நிருவாக முதுமாணி | எம்பிஏ (கற்கைநெறி மூலம்) |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2020, திசெம்பர் 16.

---

ச.வ.பி. 21/ 78 (xiv)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

20 (4) (ஆ) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4)(ஆ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகம் பாரதூரமான முறையில் சீர்குலைந்துள்ளதெனவும் சொல்லப்பட்ட நிறுவகத்தின் அதிகாரிகள் வழமையான நிலைமைகளை மீள நிலைநாட்டுவதற்குத் தவறியுள்ளார்கள் எனவும் திருப்திப்படுவதன்மேல், சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின், கட்டளைச் சட்டத்தின், நியதிச் சட்டத்தின், துணைவிதியின், ஒழுங்குவிதியின் அல்லது விதியின்கீழ் கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கும், புரியும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக, கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகத்தின் சொல்லப்பட்ட பணிப்பாளருக்குப் பதிலாகத் தகுதி வாய்ந்த அதிகாரியாக இருப்பதற்கு சிரேஷ்ட பேராசிரியர் ஜனிதா அபேவிக்கிரம லியனகே அவர்களை 2020, திசெம்பர் 13 ஆந் திகதியிலிருந்து இக்கட்டளை மூலம் நியமிக்கின்றேன்.

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2020, திசெம்பர் 26.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.